உ

சிவமயம்

REGISTERED AS A NEWSPAPER IN GEYLON
P. M. G. NO. H. A.
19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ கார்த்திகை மீ உசஉ (1947 டிசெம்பர் 9 செவ்வாய்க்கிழமை) [ இல கூஎ

## சிவனடியார் பெருமை

(திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

சிவனடியார் பெருமையை அப்பர் சுவாமிகள் கன்ருப்பூர்த் திருத்தாண்டகத்தில் நன்கு கூறியுள்ளார். அப்பாடல்களுள் ஒன்று வருமாறு:

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்டபோது
வுகந்தடிமைத் திறநினைந் துவந்துநோக்கி
இவர்தேவ ரவர்தேவரென்றுசொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் திறமேபேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காணலாமே,

சிவசின்னங்களைத் தரித்துள்ளவர்களைச் சிவனடியவராகப் பாவித்து வணங்க வேண்டுமென்பது இதனுற் பெறப்பட்டது. சாதி, குலம், பிறப்பு முதலியன அவசியமில்லை யென்பதை மற்ருெரு திருத்தாண்டகத்தில் புகல்கின்ருர்,

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனு
மங்குவா ரவர்செல்வமதிப்பேமல்லோ
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
யாவுரித்துத் தின் றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி
லவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே.

குலச்சிறை நாயனர் அடியவர்களைக் குலங்குடி பாராமல் பூதிசாதனங்களைக் கண்டு பணிந்தாரென்பதைத் திருஞானசம்பந்தர் திருவாலவாய்ப் பதிகத்தால் அறியலாம். குலச்சிறையாரைச் சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் "பெருநம்பி" என்று போற்றுகிருர்,

"தொண்டரா யுள்ளார் திசைதிசை தோறுந்
தொழுதுதன் குணத்தினைக் குலாவக்
கண்டுநாடோறு மின்புறுகின்ற குலச்சிறை"

(சம்பந்தர் தேவாரம்)

இப்படி அடியார் பத்தியிற் சிறந்தவர்களின் சரித்திரங்களைப் பெரிய புராணத்தில் பாக்கக் காண்க. அடியவரின் பெருமையைச் சேக்கிழார் ஓர் பாடலில் கூறுவதாவது:

ஞாலமுய்ய நாமுய்ய
நம்பிசைவ நன்னெறியின்
சீலமுய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பாடச்செழு மறைகள்
ஓலமிடவு முணர்வரியா
ரடியாருடனு முளதென்ருல்
ஆலமுது செய்தபிரா
னடியார்பெருமை யறிந்தாரார்,

இதனுல் அடியவருக்கும் சிவபிரானுக்கும் பேதமில்லையென்பது பெறப்பட்டது காண்க.

அடியார்களின் பெருமையைச்சிவப்பிரகாசர் மிக அழகாக ஒரு பாடலில் விளக்குகிருர்.

மதிநுதற் பவளவாய்க்
கருந்தடங்கட்
குவிமுலைப் பசும்பொற்
கொடிதனை யிமையாக்
காதன்மீ தூரக்
கலவிசெய் திடுவான்
புகும்பொழு தவனொரு
பொருளையுட் கிடப்பப்
படர்பூதிர் வேனிற்
பகற்கொடும் பாலை
நிலத்துநீர் வேட்டோ
னீரசி தினிற்பெற்
றுண்புழி யுண்ணு
தொல்லையிற் றடுக்குஞ்
செயலென வெமைநீ
தீண்டே லென்று
நின்மே லாணை
நிகழ்த்திட நீக்கிப்
புணரியுண் டெழுந்த
புயனிகர் வளர்குழ
லஃதுறை முகில்போன்
றழுனுறுங் காறுந்
தீண்டா தொருநூஞ்
சேர்க்கையிற் றயின்று
மாறு வன்பு
வளர்மனத் தவனே

2 மிளிர்தரு தூர்த்த
வேடமா தவனுய்
நீமுன் கற்பு
நீங்கா மாதைத்
தருகெனக் கொடுத்துத்
தன்பெருங் கிளைஞர்
மானமீக் கூர
வந்தனர் சூழ
ஒன்னலர் போல
வுடன்றவர்ப் படுத்துக்
கரையில்பே ருவகைக்
கடல்படிந் தவனே

3 திருமணக் கோலஞ்
செய்துவீற் றிருந்த
அருமகள் கூந்த
லையகின் னுருவங்
கரந்துசென் றிரப்பக்
களித்தக மணப்பூம்
பந்தரிற் கிளைஞர்
பலருங் காண
அரிந்து கொடுத்த
வடியவன் தானே

4 நின்னொரு விழிசெந்
நீர்கொளக் கலங்கித்
தன்னொரு விழிவெஞ்
சரதினு லிடந்து
சாத்தி மற்றைத்
தடங்கணவ் வகைபெற
இன்ன முண்டொரு
கனென் றுளங் களித்து
மற்றதுங் கலைவான்
வாளிநட் டவனே

5 மருவலன் புணர்ப்பான்
மாய்ப்பவன் மெய்த்தவன்
வந்தனன பலையான் [போல்
மார்பிடைத்து தாக்க
கண்டுட் கடைத்தலைக்
காவல னொருவன்
வெருண்டவற் றணிப்பான்
[illegible]

பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

கள்ளவிழ் மலர்மே லிருந்தவன் கரியோ னென்றிவர் காண்பரிதாய
ஒள்ளெரி யுருவ ருமையவ ளோடு முகந்தினி துறைவிடம் வினவில்
பள்ளநீர் வாளை பாய்தரு கழனிப் பனிமலர்ச் சோலைசூ ழாலை
ஒள்ளிய புகழார் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே.

—சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## 3-வது உலகயுத்தம்

### பலஸ்தீனத்தில் ஆரம்பமாகுமா

பலஸ்தீனப் பிரிவினை சம்பந்தமாக அராபியர்க்கும் யூதர்க்குமிடையே எழுந்துள்ள பிணக்கு வரவர முற்றிக்கொண்டுவிட்டது. இரண்டுபகுதியார்க்குமிடையே சமரசம் ஏற்படும் என்றிருத்தல் துர்லபம். இதற்கிடையில் பலஸ்தீனத்தில், இருபகுதியார்க்குமிடையே கலகம் வெகுவாகப் பரவிவிட்டது.

இரண்டுபகுதியாரும் இப்போது படைதிரட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் பட்டாளங்களில், சென்ற யுத்தத்தில் கடமையாற்றிய அநேக வீரர் அராபியர்பக்கம் யுத்தம்செய்ய ஆயத்தமாய் நிற்கின்றனராம்.

250,000 அமெரிக்கப் போர்வீரரைக்கொண்ட ஓர் பட்டாளத்தைத் திரட்ட யூதர் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இப்பட்டாளத்தைச் சிறந்த அமெரிக்கச் சேனுதிபதிகள் நடத்துவராம்.

## நெல் அரிசிக் கட்டுப்பாடு

### அடுத்த ஆண்டில் நீக்கப்படும்

இப்போது விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் புசல் ஒன்று 6 ரூபா வீதம் நெல்வாங்கும் திட்டம் ஒன்று இருக்கிறது, இத்திட்டத்தை அடுத்த ஆண்டு தொடக்கம் கைவிட அரசாங்கம் யோசிக்கிறது என்று கொழும்பு 'ரைம்ஸ்' பத்திரிகையின் நிருபர் தெரிவிக்கிருர்.

இத்திட்டம் கைவிடப்பட்டால் ஓர் பகுதியிலிருந்து இன்னேர் பகுதிக்கு நெலலோ அரிசியோ கொண்டுபோகக்கூடாது என்ற கட்டுப்பாடும் தவிர்க்கப்படுமாம்.

இப்போதுள்ள கட்டுப்பாட்டை நீக்கிவிடுவதும், தொடர்ந்து நடத்துவதும் பர்மாவிலிருந்து அடுத்தஆண்டு கிடைக்கும் அரிசித் தொகையைப் பொறுத்திருக்கிறது.

இதுவரை நிகழ்ந்த கலகத்திலே, 30 யூதரும் 25 அராபியரும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

## ஒன்றும் மூன்றும்

### வேதாந்த—சித்தாந்த விளக்கம்

[ சித்த இளம்பூரணர் ]

விவேகானந்தர் கனகசபைப்பிள்ளைக்குக் கடிதம் எழுதியிருந்தார். "உள்ளது ஒன்றுதானே! அதைவிட்டு அதிகப்படியாக எண்ணவல்லவர்கள் நூறு ஆயிரம் என்று சொல்லலாகாதா? மூன்றோடு நிறுத்துவானேன்?" என்பது அவர் கடிதத்திலுள்ள கேள்வி.

கனகசபைப் பிள்ளை பதில் எழுதினர்: "அறிவித்தால் அறியும் உயிர் ஒன்று; அறிவித்தல் இன்றியே முற்றுணர்வு உடைய இறை ஒன்று; உணர்த்தினுலும் உணர்ந்துகொள்ள முடியாத சடப்பொருள் ஒன்று; ஆக மூன்று. இவைதவிர தாங்கள் வேறு பல கூறினல் அவைகளும் கொள்ளத் தக்கதே" என்பது அவர் எழுதிய பதில்.

"யான் இவ்வகையில் எண்ணவில்லை. பொருத்தமாக இருக்கிறது" என ஒத்துக்கொண்டு விவேகானந்தர் மறுபடியும் எழுதினர்.

இவ்வகையில் எண்ணி அதன் பயனை உலகிற்கு உதவ விவேகானந்தருக்கு காலமில்லாது போயிற்று. [illegible]து போதாக்காலம்.

தற்போதுள்ள சுத்தானந்த பாரதியார் 'திருமந்திர விளக்கத்தில்' பின்வருமாறு கூறுகிருர்.

"சித்தாந்தம் எல்லையற்றவிரிவுடையது அது ஆகமத்தை அடிப்படையாகக்கொண்ட திருவருட்கோயில் போன்றது.

வேதாந்தத்திற்குத் தற்போது ஏராளமான பிரசாரம் உள்ளது. விவேகானந்தரும் இராமதீர்த்தரும் அதைக் கடல்கடந்து கர்ச்சித்தனர்.

சித்தாந்தம் ஆழ்ந்தகன்று உயர்ந்து எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கிச் சமயாதீதப் பொருளை எட்டி நிற்கிறது. அதன் அறிவை மீண்டும் உலகில் தூண்டவேண்டும்.

ஜீவன் அல்லது ஆன்மா களிம்பேறிய செம்புபோன்றது. அதை மாசறுத்து, அன்புலையில் வைத்துருக்கி அருளால் பரிசித்து வேதிசெய்து அறிவுத்தங்கம் ஆக்கி இறைவனுக்கு அணிவதே சித்தாந்தத்தின் தனிப்பெருமையாகும்.

வேதம் 'நீ ஆன்மா; அதுவே பிரமம்' என்றுசொல்லி அடங்கிவிடுகிறது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞு
கார்த்திகைஉச ௨ செவ்வாய்க்கிழமை


## கள்ளுண்டல்

காதல் கவறுடல் கள்ளுண்டல்
பொய்மொழிதல்
ஈதன் மறுத்தல் இவைகண்டாய் —
போதில்
சினையாமை வைதுந் திருநாடா
செம்மை
நினையாமை பூண்டார் நெறி

மதுபானம் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றென்பதும், இது உலகத்திலே எச்சமயத்தாராலும் விலக்கப்பட்டதென்பதும், இதனால் விளையக்கூடிய தீமைகள் பலவென்பதும், அவற்றுட் பிரதானமானவை கலகம், சண்டை, கொலை, பொருளழிவு, குடும்பப் பிணக்கு முதலியனவென்பதும், கள்ளுண்டார் நஞ்சுண்டாரை யொப்பரென்பதும், கொடிய தரித்திரத்திற்கும் ஏனைய பாதகங்களுக்கும் இந்தக் கட்குடியே காரணமென்பதும் இன்ன பிறவும் முன்னர்ப் பலமுறை இப்பத்திரிகை வாயிலாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இக்காலத்தில் இலங்கையிலே இலங்கையுள்ளும் இந்த வடஇலங்கையிலே இம்மதுபானமானது வரவர அதிகப்படலாயிற்று; இங்கு நடக்கும் வேறு தீமைகளெல்லாவற்றிற்கும் இம்மதுபானமே மூலகாரணமாயிற்று; இற்றைக்குச் சில வருடங்கட்கு முந்தி மிகவுங் குன்றியிருந்த இத்தீமை காலகதியில் அதிசப்பட்டமைக்குக் காரணஞ் சிலவுண்டு; முந்தி இந்த வடபகுதியிலே மதுபான நீக்கச் சங்கங்கள் பல தாபிதமாகி இக்கொடிய செயலை அறவே ஒழித்தற்குப் பலவகையான இடையறு முயற்சிகளைச் செய்து, ஒருவாறு இவ் வடமாகாணத்தில் மதுபானம் அரிதினுமரிதென்று சொல்லும்படியாகச் செய்துவிட்டன; பின்னர் இலங்கை யரசினர், மதுபானத்தைத் "தவறணை" மூலமாகவோ, மரவரி மூலமாகவோ வைத்தல்வேண்டுமென முயன்று சனங்களுள் மதுபானத்து அபிமானங் கொண்டாருடைய சம்மதத்தைப் பெற்று ஒருவாறு தவறணை மூலமாக மதுபானஞ் செய்தலை ஆக்கிவிட்டனர்; அரசினர் இப்படிச் செய்யத் தொடங்கியமை, அரசிறை வருமானத்தை அதிகரிக்கச் செய்தற்கேயாம்; அரசினர் இப்படிச் செய்யவே, சில வருடங்களாகக் குன்றிக்கிடந்த மதுபானம் பின்னர் விருத்தியாகத் தலைப்பட்டது; மதுபானத்தை அறவே நீக்கவேண்டுமென முந்தியே முயற்சிசெய்த மதுநீக்க அபிமானிகளும், அரசினர்தம் முயற்சிக்கும் நோக்கத்திற்கும் மாறாக முயற்சி செய்வதைக்கண்டு அலுத்துவிட்டனர். ஊரிலுள்ள பாமரமக்களும் மறந்திருந்த மதுவிச்சை பழையபடி மீண்டுவரப்பெற்றனர்.

இங்ஙனமாகத் தவறணை வாயிலாகக் குடித்தலினல் தங்கள் மதுவேட்கை தீராத மாந்தர் இங்குள்ள அதிகாரிகள் சனப்பிரதிநிதிகளின் உதவியைக் கொண்டு மரவரிமூலம் மதுபானத்தை விரும்பினர்; அந்த நேரத்திலே இங்குள்ள மதுநீக்கஅபிமானிகளும், அரசாங்க சபைச் சிங்களப் பிரதிநிதிகளும் மரவரி முறையை யாழ்ப்பாணத்திற் கையாளத் தலைப்பட்டால், மதுபானமும் அதனல் வருந் தீமைகளும் மிகவும் அதிகப்படுமென ஓலமிட்டார்கள்; எச்சரித்தார்கள்; மதுவின்பாற் பட்டார் செவியில் அவர்கள் சொன்ன நல்லபுத்தி ஏறவில்லை; இதனல், இங்குள்ள மாக்கள் சம்மதத்தோடு மரவரிமுறை தலைப்பட்டது; ஒவ்வொரு பனைமரத்தின் அடிநிலத்திலும் ஒவ்வொரு சின்னத் தவறணை உண்டாகிப் பெரிய தவறணைகளைக் காட்டிலும் அதிக மதுவைச் சுரக்கலாயிற்று; பல வருடங்களாக விருந்த கள்ளுப்பஞ்சம் அறவே நீங்கலாயிற்று.

இப்படியான நிலையிலிருக்கும்போது உலக இரண்டாம் யுத்தந் தொடங்க, அதனலே உணவுப்பொருள், உடைப் பொருள் பஞ்சமடைய, அது காரணமாக மேற்படி பொருள்களுக்குக் கட்டுப்பாட்டுப் பிரமாணம் விதிக்கப்படலாயிற்று; ஆனல் கள்ளுக்கு மாத்திரம் கட்டுப்பாடில்லாமற் போயிற்று. உணவு குறைந்த காலத்திலே மதுபானத்தை நிறைய உட்கொண்டால் ஊக்கமாகத் தொழில் புரியலாம், வேலைசெய்யலாமென்ற விபரீத கொள்கையும் மக்களுக்கிடையே பிறந்தது.

இனி, பட்டின சங்கம் பாராளுமன்றம் என்னுமிவைகளுக்குப் பிரதிநிதிகளைத் தேருங் காலங்களிலும், இச்சங்கம் மன்றமென்னு மிவைகட்குப் பிரதிநிதிகளாய் வருதற்கு முற்பட்டு நிற்போருட் சிலர், குறித்த தேர்தற் காலத்தில் தம்பக்கல் தொகைகூடிய சம்மதத்தைப் பெறுதற்காக யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல இலங்கையின் ஏனைய பாகங்களிலும் இந்தக் கொடிய மதுபானத்தைத் தங்கள் கருமத்திற்குத் துணைக்கருவியாக உபயோகிக்கத் தலைப்பட்டுக்கொண்டனர்; இதனல் முன்னர் மதுபானஞ் செய்யாதார் சிலரும் மதுபானஞ் செய்யப் பழகிக்கொள்வதுமுண்டு; இப்படிப் பலவகையாலும் மதுபானந் தலைப்பட்டுக் கொண்டமையினல், மதுபானஞ் செய்வோர்தொகை நூற்றுக்கு ஐம்பதுவிகிதம் அதிகப்பட்டு விட்டதெனலாம்.


மதுபானம் இப்படி முற்றிவிட்டபடியால், இனி இத்தீமையை அறவே அகற்ற இன்னே முயற்சி செய்தல் வேண்டும்; இந்தியாவிலே இந்திய அரசினர் மதுபானத்திற்கு மாறாகப் பிரமாணம் வகுத்து, பம்பாய் சென்னை முதலிய பல இடங்களில் மதுபானத்தை அறவே ஒழித்துவிட்டனர்; இந்தியாவிலும் இலங்கையிலும் மதுபானம் அதிகப்பட்டமைக்குக் காரணம் அந்நிய நாட்டின[illegible]மெனல் தவறா[illegible]; இப்பொழுது இந்தியாவைப்போல் இலங்கையிலும் சுதேச பரிபாலனம் ஏற்பட்டுவிட்டபடியினல் இந்த மதுபானமெனப்படும் மாபாதகத்தை, பெருங்கேட்டினை அறவே அகற்றுதற்கு ஆகவேண்டிய [illegible] அரசினர் அதிகார முறையிற் செய்வார்களா?

# நாவலர் இன்று வாழ்ந்தால்

### சிங்களர் - தமிழர் ஒற்றுமைக்கு உழைப்பார்

### போக்குவரத்து மந்திரியின் நாவலர்தினச் செய்தி

### ஒற்றுமை! ஒற்றுமை! அதுவே எமக்கு உறுதி



கௌரவ ஜே. எல் கோத்தலாவலை

இன்றைக்கு இலங்கை சுதந்திரப் பாதையை அடையும் தருணத்தில் இருக்கிறது. அதற்குக் காரணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருந்தகை போன்ற புண்ணிய புருஷர்கள் இந்த நாட்டில் அவதரித்து ஆற்றிய தொண்டுதான் என்று இலங்கைப் போக்குவரத்து, பகிரங்க வேலைப்பகுதி மந்திரியாகிய கௌரவ கர்னல் ஜே. எல் கொத்தலாவலை அவர்கள் ஆங்கில இந்துசாதன நாவலர் ஞாபகார்த்தவெளியீட்டுக்கென அனுப்பிய ஓர் செய்தியிற் குறிப்பிடுகிறார். அவர் அச்செய்தியிற் கூறியிருப்பதாவது:

யாழ்ப்பாணத்து இந்துசாதனப் பத்திரிகை, நாவலர் ஞாபகார்த்த வெளியீடு ஒன்றைப் பிரசுரிக்கப்போகிறதென்பதறிந்து நான் அளவிலா ஆனந்தமடைகிறேன்.

எங்கள் நாட்டிலே இன்று சுதந்திரத் தீபம் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கிறது இந்தசதீபத்தை ஏற்றிவைத்தவர்கள் யார்? ஆறுமுகநாவலர் போன்ற தேசிய வீரசிங்கங்கள்தான். எங்கள் நாட்டிலே அன்றுதொட்டின்றுவரை காலத்துக்குக் காலம் மக்கள் சுதந்திரத்துக்காய்த் துடிதுடித்தனர். அவர்களின் ஒவ்வொரு துடிதுடிப்புக்கும் மூலகாரண புருஷர் யார்? சமயம் என்பது சாமானியமான ஓர் விஷயமல்ல, அது ஓர் தெய்விகத்தன்மை வாய்ந்தது என்பதை உணர்ந்து மக்களின் சமயத்தைப் பாதுகாத்து, அச்சமயக் கோட்பாடுகளை, ஆசார நுட்டானங்களை சீர்கெடாதுநிலைநாட்டுவதற்காய், அல்லும் பகலும் சலியாதுழைத்த எம் நாட்டுச் சமய குரவர்களாலேயே இலங்கை மக்களின் சுவாதீனத் துடிதுடிப்பு ஏற்பட்டது, அவர்களுக்குச் சுதந்திரத்தில் உற்சாகம் பிறந்தது என்று கூறினல் அது மிகையாகாது. புராதனமான பௌத்தமதத்தைப் பாதுகாப்பதில் இலங்கைவாழ் பௌத்த மக்களை ஒன்றுசேர்த்த பெருமை பௌத்த பிரமஞான சங்கத் தொண்டர்களுக்கும் ஸ்ரீ சுமங்கல போன்ற பெருந்தகையாளர்க்குமேயுரியது. அதேபோல, வட இலங்கையிலே யாழ்ப்பாண மக்களைச் சரியான மார்க்கத்தில் வழிகாட்டிய பெருமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலப் பெருமானுக்கே உரியது; அப்பெரியார் அன்றுஆற்றியதொண்டின் காரணமாகவே, எங்கள் காலத்திலே, வடபகுதி மக்கள் புத்துயிரும் புத்தூக்கமும் கொண்டு சுதந்திரப் போராட்டத்து முன்னணியில் நின்றனர். ஸ்ரீலஸ்ரீ நாவலப் பெருந்தகை அன்று நாட்டிய விதையே சேர். பொன். இராமநாதன், சேர். முத்துக்குமாரசுவாமி முதலாம் தேசிய முளைகளாக அங்குரித்தது. சேர் ராமநாதன், சேர். முத்துக்குமாரசுவாமி முதலாம் தேசிய வீர சிகாமணிகள் தமிழ்மக்களுக்கு மாத்திரம் தலைமை தாங்கி நிற்கவில்லை. இந்த நாட்டின் சகல மக்களுக்கும் தலைமை தாங்கி அவர்களை நடத்தினர்கள். அவர்கள்—அந்த வீரத் தியாகிகள்—ஆற்றிய சேவை இன்று பரிணமித்து அதன் பயன்களை நாம் அனுபவிக்கிறோம். இன்று அந்தத் தியாக புருஷர்கள் எம்முடன் இல்லை. ஆனல் அவர்கள் ஞாபகம் எம் மனதைவிட்டு என்றும் அகலாது. இச் சந்தர்ப்பத்திலே எனது யாழ்ப்பாணச் சகோதரர்க்கு நான் சமர்ப்பிக்கும் விண்ணப்பம் இதுதான்: 'எமது கருமத்தை எம் மிஷ்டப்படி நடத்த அதிகாரம் வழங்கும் ஓர் அரசியற்றிட்டத்தை இலங்கையராகிய நாம் இன்று பெற்றிருக்கிறோம். உலக சமஷ்டியிலே, உலக மக்கள் மத்தியிலே நாமும் சுதந்திர மக்களாக, சுதந்திர புருஷராக ஓர் ஸ்தானத்தைக் கூடியசீக்கிரம் அடையப்போகிறோம். இது எங்கள் சொந்தநாடு. இந்த ஈழவள நாட்டிலே நாங்கள்—ஓர்தாய் பிள்ளைகளாகிய நாங்கள்—இனியும் "நீவேறு,நான்வேறு" என்ற பாவனையில் ஓர்போதும் பிரிந்திருக்கமுடியாது. ஆனையிறவுக்கப்பால் ஓர்பகுதியும், ஆனையிறவுக்கிப்பால் இன்னேர் பகுதியுமாக நாம் யுத்தசந்நத்தராக ஒருவரோடொருவர் பொருதும் நிலையில் நிற்கமுடியாது நாம் ஒன்றுபடவேவேண்டும். எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் ஈழவளத் தாயின் மணியுதரத்துதித்த புதல்வர்கள் என்பதை அகத்துட்கொண்டு ஒத்துவாழ்ந்து, எம்மன்னையாம் தாய் நாட்டுக்குத் தொண்டாற்றுவோம். இன்று எம்மிடம் வேண்டியது யாது? ஒற்றுமை! ஒற்றுமை!ஒற்றுமை! அதுவே இன்று ஆவசியகம்வேண்டற்பாலது; கடந்த காலத்திலே பிழைகள் ஆற்றப்பட்டிருந்தால் அந்தப் பிழைகளை நிவிர்த்திப்பது எப்படி? அவற்றை மறக்காமல், மீண்டும் மீண்டும் பிழைகள் செய்தால், அப்பிழைகள் நிவிர்த்திக்கப்படுமா? ஓர் பிழையை நிவிர்த்திக்க, ஒன்பது பிழைகள் செய்ய வேண்டுமா? எங்கள் தேசம் ஓர் தனி மனிதனிலும்பார்க்க மேம்பட்டது. ஓர் தனி மனிதனின் பொருட்டுத் தேசநலன்களைப் பலியிடமுடியாது. கட்சிகளிலும் பார்க்கப் பொதுஜனநலமே மேம்பட்டது. கட்சி நலனையிட்டுப் பொதுஜன நலத்தை அர்ப்பணம் செய்யக்கூடாது. இன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருமான் உயிருடன் இருந்தால், சிங்களரும் தமிழரும் ஒற்றுமையாய் இருக்கவேண்டியதன் அவசியத்தையும், தமிழ்ச் சாகியத்தாரின் பாதுகாப்புக்கு இவ்வொற்றுமை ஏற்படவேண்டியதன் அவசியத்தையும்நிச்சய

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் தமிழர் நிலை

## இனியாவது சமரசம் ஏற்படுமா?

### தமிழர்களுக்கு ஓர் வார்த்தை

[நமது அரசியல் நிருபர் எழுதுகிறர்]

சென்றவாரம் இலங்கைப் பாராளுமன்றத்திலே இரு விசேஷ சம்பவங்கள் நிகழ்ந்தன. ஒன்று இலங்கைச் சுதந்திர மசோதா நிறைவேறியமை. எது எப்படியிருந்தபோதிலும், இனி வழங்கப்படவிருக்கும் "சுதந்திரம்" உண்மையில் ஓர் பெரிய முன்னேற்றம்தான் என்பதை இடதுசாரிக்கட்சிகள் தாமும் ஒத்துக்கொள்ளுகின்றன. இந்த முன்னேற்றம் இலங்கை மக்கள் யாவர்க்கும் பயன்படத் தக்கமுறையில், இலங்கை அரசியல்வாதிகள் அதனை உபயோகிப்பரேயானல், பூரண சுதந்திரம் கிடைப்பதற்குக் காலம் செல்லாது. எனவே மிஸ்ரர் சேனநாயக்காவுடன் சேர்ந்து இலங்கைவாழ் மக்கள் அனைவரும் இப்போது கிடைக்கவிருக்கும் முன்னேற்றத்தின் பொருட்டுச் சந்தோஷமடைவார்களாக.

●

#### தேனீர்ப்பான வைபவம்

இரண்டாவது பிரதான சம்பவம், தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் விஷயத்தில் பிரதமர் மிஸ்ரர் சேனநாயக்கா காட்டிய நேச மனப்பான்மையே ஆகும். சுதந்திரத் தீர்மானம் சம்பந்தமான விவாதம் நடந்து முடிந்ததும், மிஸ்ரர் சேனநாயக்கா தேநீர் அருந்துதற்காக, ஸ்ரீ பொன்னம்பலத்தைக் கொண்டு வரவேண்டும் என்று விரும்பினாராம். திரு. சுந்தரலிங்கம் அதன்படி போய் திரு. பொன்னம்பலத்தை அழைத்தாராம்; சுந்தரலிங்கம் என்றால் ஜீ ஜீக்கு வேப்பங்காய். திரு. சுந்தரலிங்கத்தின் முகத்தைப் பார்க்கக்கூட மறுத்தாராம். ஆயினும், அவ்வளவுடன் மிஸ்ரர் சேனநாயக்கா விடவில்லை. தாமே சென்று திரு. பொன்னம்பலத்தை அழைத்துக்கொண்டு வந்து தம்முடன் கூடவைத்துத் தேநீர் அருந்தினாராம். இது ஓர் நல்ல சகுனம், ஆனல் தேநீர்ப்பானமளவுடன் இந்த நேசபான்மை நின்றுவிடக்கூடாது என்பதே எனது அவாவும் பிரார்த்தனையுமாகும்.

●

#### நல்ல உற்பாதம்

நன்மைக்கோ, தீமைக்கோ, இன்று தமிழ்க்காங்கிரஸ்தான், வடமாகாணத் தமிழ்மக்கள்—விசேஷமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழ்மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாயும், ஜீ. ஜீ தான் அவர்களின் தலைவராகவும் விளங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனை மிஸ்ரர் சேனநாயக்காவும், அவருடைய சகாக்களும் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். ஓர் காலத்திலே தமிழ்க்காங்கிரசின் கொள்கைகள் ஓரளவுக்குப் பிற்போக்காக இருந்தனவென்பது உண்மை. அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. ஆனல் காலத்தின் போக்கை ஒட்டி தமிழ்க்காங்கிரஸ் தனது அரசியற் கொள்கையைப் புரட்சிகரமான முறையில் மாற்றியிருப்பது பாராட்டத்தக்க ஓர் விஷயம். இலங்கையின் முன்னேற்றத்துக்குக் காங்கிரஸ் உழைக்கத் தயார். இப்போதுள்ள நிலையில் காங்கிரசிற்கும், மிஸரர் சேனநாயக்காவின் கட்சிக்குமிடையே அரசியற் கொள்கைகள் விஷயமாக அவ்வளவு அபிப்பிராயபேதம் இல்லை என்பதே எனது அபிப்பிராயம். இருபகுதியினர்க்குமிடையே அதிகமான ஒற்றுமைப்பாடுகள் உண்டு. எனவே, இனியாவது இருசாராரும் சேர்ந்து ஏன் ஒத்துழைக்கக்கூடாது என்று கேட்கிறேன். சுதந்திரத் தீர்மானம் விஷயமாகத் தமிழ்க்காங்கிரஸ் சமதர்மிகள், சமசமாஜிகளுடன் சேராது நடுவுநிலைமை வகித்ததும், இந்த ஒற்றுமை ஏற்படுதற்கு ஓர் நல்ல உற்பாதமாகும். இந்த விஷயத்தில் சர்வகலாசங்கப் பேராசிரியர் திரு எப். எச். வி. குலசேகரம் அன்று எழுதிய பொன்மொழிகளைத் தமிழ்க்காங்கிரஸ் வாதிகள் பின்பற்றுதல் நலம் என்றே எண்ணுகிறேன்.

●

#### அரசியல் அநாதைகளா?

சமசமாஜிகள், சமதர்மிகள்மூலம் தமிழ்மக்களுக்கு விமோசனம் கிடைக்குமென்றே, தமிழ்க்காங்கிரசிற்குச் சலாக்கியம் கிடைக்குமென்றே எதிர்பார்த்தல் வீண் கனவு "எம் கருமத்தைச் சாதிப்பதற்காகப் பிசாசுடனும் சேர்வோம், பிசாசின் பாட்டியுடனும் சேர்வோம்" என்று மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன அன்று பாராளுமன்றத்தில் கூறியதைக் காங்கிரஸ்வாதிகள் ஒவ்வொருவரும் கூர்ந்து நோக்குதல் வேண்டும். அவர் கூறிய பிசாசு யார்? பிசாசின் பாட்டி யார்? என்று கேட்க ஒவ்வோர் தமிழ்மகனும் தயாராக இருத்தல் வேண்டும். இன்று இடதுசாரிகள் தமிழ்க்காங்கிரசை ஆதரிப்பது தங்கருமம் சாதிப்பதற்கன்றி, அக்காங்கிரஸ்மீதுள்ள அளவற்ற அபிமானத்தால் அல்ல என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். ஆனல் இப்போதுள்ள நிலைமையை அவதானிக்குமிடத்து, இடதுசாரிகள் 5 வருஷகாலத்துக்குத் தம் நோக்கத்தை ஓர்போதும் பூர்த்தியாக்கமாட்டார்கள் என்பது அவர்களுக்கிடையேயுள்ள பிரிவினையிலால் நன்கு விளங்கும். இந்த 5 வருஷகாலத்துக்கும் மிஸ்ரர் சேனநாயக்காவின் கட்சியே அதிகாரம் வகித்துச் சகல கருமங்களையும் ஆற்றும். இவ்வளவுகாலத்திலும் தமிழ்மக்கள் நிலைமை என்ன? அரசியல் அநாதைகளாகத்தான் இருப்பதா? என்றுகேட்கிறேன்.

●

#### தமிழன் தனிச்சிறப்பு

சேனநாயக்காவும் அவரது கட்சியும், வேண்டுமானல் இந்த 5 வருஷமும் பரிபாலிக்கட்டும், அதற்குப்பின் பார்த்துக்கொள்ளலாம் என்று ஓர்சாரார் கூறுவர். வரப்போகும் காலம்தான் ஆக்கக்காலமும், அழிவுக்காலமும் என்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். தமிழ்மக்கள் தங்களை—தங்கள் எதிர்காலவாழ்க்கையை ஸ்திரபபடுத்த வேண்டுமானல், இந்த 5 வருஷகாலத்திலும் விழிப்புடன் இருத்தல்வேண்டும். கேந்திரஸ்தானங்களில் பதவிவகித்து, எம் சாகியத்தார்க்கு எது எது செய்யவேண்டுமோ, அது அதனைச் செய்யவேண்டும். மற்றவர்கள் எதும் கெடுதி விளைக்கத்தக்க விஷயங்களைச் செய்ய முனையும்போது அதனைக் கெடுக்க வேண்டுமானல் நாம் கேந்திரஸ்தானங்களில் இருக்கவேவேண்டும், உதாரணத்துக்காக ஓர் விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம் இந்தியாவிலே, சில மாகாணங்களிலே இப்போது செய்யப்படுவது போல, [illegible] யாக ஜனத்தொகைக் கேற்பத்தான் வழங்கப்படவேண்டும் என்று ஓர் சட்டத்தை இலங்கையராசாங்கம் இயற்றினல், அதனைத் தடுப்பதற்கு இப்போதுள்ள நிலையில் எமக்கு ஏதும் அதிகாரம் உண்டா? சமசமாஜிகளும், சமதர்மிகளும் எமக்கு உதவிசெய்வரா? அப்படி ஓர் சட்டம் நிறைவேறினல் அதனல் அதிகம் பாதிக்கப்படுவது யார்? தமிழ்மக்கள்தான்! அதுபோல, இப்படியே அநேகம் உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். பத்தும் பத்தும் இருபதுதான்: ஒருபோதும் இருபத்தைந்தாகமாட்டாது. அதுபோல, தமிழராகிய நாம் எப்போதும் சிறுபான்மையினராகத்தான் இருப்போமன்றி எந்த அரசியற்கட்சி அதிகாரத்தில் வந்தாலும் பெரும்பான்மையினராகமாட்டோம். இந்த ஓர் பெரும் உண்மையை நாங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். "தமிழனென்றொரு இனமுண்டு, தனியே அதற்கொரு மதிப்புண்டு" "தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்றார் நம் நாமக்கல்கவிஞர். வாய்ப்பேச்சு வீராகவோ, பேய்த்தனமாகவோ இராஜதந்திரமின்றியோ நடக்க, நாமக்கல் கவிஞர் தம் கவியினல் கூறவில்லை, இன்று 40 கோடி மக்களை, 60க்கு மேற்பட்ட பாஷையினரைக்கொண்ட பரத கண்டத்திலே, பொக்கிஷமந்திரி யார்? ஓர் தென்னட்டுத் தமிழன்! இந்தியாவின் முதல் இந்தியக் கவர்னர் ஜெனரல் யார்? ஓர் வீரத்தமிழன். இன்று பாரதநாட்டிலே, தமிழ்மக்கள் தங்களுடைய பரந்த அரசியல் ஞானத்தாலே, புத்திசாதுர்யத்தாலே, அரசியல்வாழ்க்கையின் முன்னணியில் நிற்கக் காரணம் என்ன? இங்கே, இந்தச் சின்னஞ்சிறு இலங்கையிலே, தமிழ்மக்கள் உலக்கைதேய்ந்து உளிப்பிடியானதன் காரணம் என்ன? அங்கேவாழும் தமிழ்மக்கள் பரந்த அரசியல்ஞானம் கொண்டு தேசம் முழுவதும் தமதே என்று நினைத்துத் தொண்டாற்றி இந்த நிலைமைக்கு வந்தனர்.

●

#### தமிழன் பிரதம மந்திரி

தமிழ்மக்களாகிய நாம் தனித்தியங்க முடியவே முடியாது. இந்தியாவுடன் சேருவோம், தென்னட்டுடன் ஒன்றுவோம் என்பதெல்லாம் தோல்வி மனப்பான்மையால் உண்டான—பேய்த்தனமான எண்ணங்கள். இவற்றை எல்லாம் மூட்டைகட்டி ஓர்பக்கத்தில் வைத்துவிட்டு நாம் எம் உரிமைகளைப் பெற இராஜதந்திரத்தைக் கையாளவேண்டும். இந்தியாவிலே ஓர் தமிழன் கவர்னர்ஜெனரலாக வந்தால், சேனதிபதியாக இருந்தால், நிதிமந்திரியாகஇருந்தால் உந்நதஸ்தானங்களில் இருந்தால், இந்த இலங்கையில் நாம் ஏன் அப்படி இருக்க முடியாது? தமிழன் ஏன் இலங்கையின் பிரதமமந்திரியாக வரக்கூடாது? பிரதம சேனதிபதியாக வரக்கூடாது? எம்மிடம் அப்பதவிகளுக்கு லாயக்கான மனுஷர்கள் இல்லையா? தமிழன் எத்தனையோ உயர்பதவிகளை இந்நாட்டில் வகித்து மற்றவர்களுக்கு வழிகாட்டவில்லையா? இன்னும் உலகிலேயுள்ள எந்த அரசியல்வாதியுடனும் தலைநிமிர்ந்து வாதிடக்கூடிய, எந்த அரசியல் மன்றத்தையும் அலங்கரிக்கும் ஆற்றல்வாய்ந்தவர்கள் எம்மிடையேயில்லையா? இவர்கள் போலிக்கௌரவத்தைஇனியும் கட்டிப்பிடிக்கக்கூடாது. சந்தர்ப்பம் நேருங்கால இராஜதந்திரத்தைப் பிரயோகித்துக் கேந்திரஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டும். அதன்மூலமாகத் தமிழ்மக்கள் தாம் இழந்த உன்னத நிலைமையை மீண்டும் பெறுதல் வேண்டும். அதிர்ஷ்டவசமாக மிஸ்ரர் சேனநாயக்கா, கொத்தலாவல போன்றவர்கள் இன்று அதிகாரத்தில் உளர். இவர்கள், பண்டாரநாயக்கா போலத் தடித்த வகுப்புவாதிகள் அல்லர். அல்லது பகிரங்கமேடைகளிற் சமதர்ம

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## முதற் பிரயாணிகள்

சென்ற சனிக்கிழமை முதன்முதலாகக் காங்கேசன்துறையிலிருந்து, கொழும்புக்கு "சுரேந்திரா தேவி" என்னும்ஆகாச விமானம் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்புக்குச் சென்றது. அதில் பின்வருவோர் பிரயாணம் செய்தனர்.

வண்ணார்பண்ணை, "கஸ்தூரியார் வளவு" பிரபல ஆயுர்வேத வைத்தியர் திரு. மூ. கதிரவேற்பிள்ளை, ஹாஜி. எஸ். எம். மகமது முகையதீன் (சோனகதெரு யாழ்ப்பாணம்,.

# ராஜாஜி வாழ்க!

## நாளை 70-வது ஜெனன தினம்

தமிழ்நாட்டு வீரபுருஷன், "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்பதனை வாய்ப் பேச்சளவில் மாத்திரம் வைத்துவிடாது, அகில இந்தியாவிலும் தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அதற்கொரு சிறப்புண்டு என்பதனைக் கிரியை முறையிற் காட்டிய கர்மயோகி 40 கோடி மக்களைக் கொண்ட பாரதநாட்டின் முதல் கவர்னர் ஜெனரலாகவந்த, வரப்போகும் தமிழன் ஸ்ரீஜுத சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் 70-வது ஜெனனதினம் நாளைக்குப் பாரத நாடெங்கும் கொண்டாடப்பட விருக்கிறது. எந்தத் துறையிலும்சரி தமிழன் சிறப்பானவன்தான் என்பதை அகில உலகுக்கும் காட்டிவரும் மாசற்ற தமிழ் வீரன்—



சுத்தத் தமிழ் வீரன் — அஞ்சாத் தமிழ் வீரன்—மகாத்மாவின் வலக்கரமாய் விளங்கும் தமிழ் வீரன்—ராஜாஜி வாழ்க!

இந்திய அரசியல்

# ஹைதரபாத் விவகாரம்

## இன்னும் ஒரு முடிவும் இல்லை

#### அந்நியநாட்டுக் கொள்கை

இன்று உலக வல்லரசுகள் ஒவ்வோர்பக்கம் சார்ந்து தம் அந்நியநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன. ஆனல் இந்தியா எந்த ஓர்பக்கமும் சாராது தன் கருமத்தையாற்றும் என்று இந்தியப் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால்நேரு சென்ற வாரம் இந்தியப் பாராளுமன்றத்தில்தெரிவித்தார். அவர் கூறியதாவது: "இன்று உலகில் நாம் ஓர்பக்கமும் சாரமாட்டோம் அமெரிக்காவுடன் நாம்நேசபான்மையுடன் இருப்போம் அமெரிக்காவுடனும், சோவியத் ருஷியாவுடனும் நாம் ஒத்துழைக்க உத்தேசித்திருக்கிறோம். இப்படிச் செய்வது ஓர் தனிக்காட்டுக் கொள்கையாகும் என்றும் சொல்லப்படக்கூடும். ஆனல் அப்படியான ஓர் கொள்கையைக் கடைப்பிடிப்பதுதான் எமக்குக் கௌரவத்தையும் அந்தஸ்தையும் கொடுக்க ஏதுவாகும். உலகிலே, வல்லரசுகளுக்கிடையில் யுத்தம் நேர்ந்தால், நாம் இயன்றவரையில் அதிற் சேராமலேயிருக்க முயற்சி செய்வோம். ஆனல் யுத்தத்திலே சேரவேண்டும் என்று தவிர்க்கமுடியாத காரணங்கள் ஏற்பட்டுவிட்டால் எமக்கு எக்கட்சியிற் சேருவதால் நன்மையுண்டோ, அக்கட்சியின்பக்கமே சேருவோம்."

#### ஹைதரபாத் வியவகாரம்

ஹைதரபாத் நிஸாம் மன்னர்க்கும், இந்திய அரசாங்கத்துக்குமிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டது, இந்தியா சுதந்திரமடைவதற்குமுன்—அதாவது 1947 ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் திகதிக்கு முன்—ஹைதரபாத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் எந்தவிதமான தொடர்பு இருந்ததோ, அதே தொடர்பு இன்னும் ஒரு வருஷத்துக்கு இருக்க, இருதரப்பினரும் ஒத்துக்கொண்டார்கள். ஆனல் ஹைதரபாத், இந்தியச் சமஷ்டியில் இன்னும் சேரவில்லை ஒருஆண்டு முடிந்ததும், நிலைமை இரு பகுதியாலும் புநராலோசனை செய்யப்படும். இதற்கிடையில் நிஸாம் மன்னர் தம் அரசாங்கத்திலே மக்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்க முயற்சி செய்கிறாராம். சத்தியாக்கிரகம் செய்த காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்து அவர்களையும் அரசாங்கத்திற் சேர்க்க முயற்சிசெய்யப்படுகிறது. ஆனல் சமஸ்தானத்திலே பூரண பொறுப்பாட்சி ஏற்படுத்தவேண்டும்; சமஸ்தானம் இந்தியச் சமஷ்டியுடன் சேர்வதா அன்றா என்பதுபற்றி ஓர் வாக்கெடுப்புநிகழ்த்தவேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளுக்கும் நிஸாம் மன்னர் இணங்கினல்தான், சமஸ்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்போக்குவரவு

## நாளைத் தொடக்கம் ஆரம்பம்

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு, சென்னை முதலாம் இடங்களுக்கு விமானமூலம் பிரயாணம் செய்யும் வசதிகள் நாளை (புதன்கிழமை) தொடக்கம் கிரமமாக நடைபெறும் என்று ஒரு அறிக்கை கூறுகிறது. ஓர் கிழமையில் திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் பிரயாணம் நடைபெறும்.

### நேர அட்டவணை வருமாறு

கொழும்பிலிருந்து விமானம் காலை 8 மணிக்கு பிரயாணமாகி, காலை 9.15 மணிக்குக் காங்கேசன்துறையை அடையும். காங்கேசன்துறையிலிருந்து காலை 9 35 மணிக்குப் பிரயாணமாகி, சென்னையை காலை 10 05 மணிக்குச் சேரும்.

பின்னர் சென்னையிலிருந்து மத்தியானம் 1 மணிக்குப் பிரயாணமாகி காங்கேசன்துறையைப் பின்னேரம் 2 30 மணிக்கு அடையும். காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 2 45 மணிக்குப் பிரயாணமாகி, பின்னேரம் 4 மணிக்குக் கொழும்பைச் சேரும்.

### பிரயாண வேதனம் வருமாறு

| | |
|---|---|
| கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு ரூ. | 35 00 |
| கொழும்பிலிருந்து சென்னைக்கு | 85 00 |
| காங்கேசன்துறையிலிருந்து சென்னைக்கு | 50 00 |

ஒவ்வொரு பிரயாணியும் 44 இறாத்தலுக்கு மேற்படாத சாமான்களைப் பிரத்தியேகமான செலவின்றிக் கொண்டுபோகலாம்.

இந்த நேர அட்டவணையில் அடங்காத பிரயாணங்களும் செய்ய ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இந்த ஒழுங்கின்படி, திருச்சிக்குப் போகவும் முடியும்

பிரயாணம் செய்பவர்கள், விமானம் புறப்பட 24 மணித்தியாலங்களுக்கு முன்னரேயே தமக்குரிய கட்டணத்தை இறுத்தல்வேண்டும். இந்தியாவுக்குப் போகிறவர்கள், தமக்குப் பால்குற்றியிருக்கிறதென்பதற்கு அத்தாட்சிப்பத்திரமும் எப்புவித்து, அரிசிக் கூப்பன் புத்தகங்களையும் ஒப்புவித்துவிடவேண்டும்.

விமானப் பிரயாணக் காரியாலயம் யாழ்ப்பாணம் விக்டோரியா ரோட் 11 ம் இலக்க இல்லத்தில் அமைந்துள்ளது அங்கே பிரயாணிகள் போனால், அங்கிருந்து காங்கேசன்துறை விமான நிலையத்துக்கு இலவசமாக ஓர் பஸ்ஸிற் கொண்டுபோகப்படுவர். இந்தியப் பிரயாணம் செய்வோர் காலை 8 மணிக்கே, குறித்த காரியாலயத்தில் நிற்கவேண்டும். கொழும்புப் பிரயாணம் செய்வோர் மத்தியானம் 1 30 மணிக்கு நிற்கவேண்டும். காரியாலயத்துக்குப் போகாமல் நேரே விமான நிலையத்துக்குப் போவோர் இந்தியப் பிரயாணத்துக்காயின் காலை 8 30 மணிக்கும் கொழும்புப் பிரயாணத்துக்காயின் மத்தியானம் 1 30 மணிக்கும், அங்கே ஆயத்தமாக நிற்றல் வேண்டும்.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருடைய புத்தகங்களை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் விளம்பரஞ் செய்யவும் சபையாருடைய இரு பத்திரிகைகளுக்கும் புதிய சந்தாக்காரரைச் சேர்க்கவும் ஊரெழு திரு. பொ. அப்புக்குட்டியவர்களை 9–11–47 ல் நடைபெற்ற நிருவாக சபைக் கூட்டத்தில் சபையார் நியமனஞ் செய்துள்ளார்கள்.

கௌரவ காரியதரிசி
யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை

M 196 9

## இந்திய அரசியல்

3-ம் பக்கத் தொடர்ச்சி

தானக் காங்கிரஸ் தலைவர்கள் அரசாங்கத்திற் சேரச் சம்மதிப்பார்கள் என்பது நிஸாமுக்குப் பட்டவர்த்தனமாக அறிவிக்கப்பட்டுவிட்டது. நிஸாம் மன்னர் இந்த நிபந்தனைகளுக்கு இணங்குவதாகக் காணப்படவில்லை, ஆகவே, காங்கிரஸ் தனது சட்டமறுப்பியக்கத்தைத் தொடர்ந்து நடத்தும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

O

### நிஸாம் உயிர் தப்பினார்

சென்ற வியாழக்கிழமை நிஸாம் மன்னர், தம்தலைப்பட்டினத்தின் பிரதானவீதி வழியாக மோட்டார் ரதத்திற் சென்றுகொண்டிருக்கையில், அவரை நோக்கி ஓர் வெடிகுண்டு வீசப்பட்டது. வெடிகுண்டு காரிற் படவில்லை. தெருவிலே வெடித்தது. அதன்பயனாக ஐந்து பிரயாணிகள் காயமுற்றனர் நிஸாம தம் காரில் இருந்து இறங்கி, வெடிகுண்டு வீசியவனைப் பொலிசார்வசம் ஒப்புவித்தனர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

O

### ஒரிஸா லீக் கலைக்கப்பட்டது

ஒரிஸா மாகாணத்தில் உள்ள முஸ்லீம் லீக் ஸ்தாபனம் கலைக்கப்பட்டுவிட்டது. இந்தியாவில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமையிலே, முஸ்லிம் லீக்போன்ற வகுப்புவாத ஸ்தாபனங்கள் இருப்பது நல்லதல்லஎன்று ஒரிஸாவில் உள்ள முஸ்லீம்கள் கருதியே ஏக சம்மதமாக அந்த ஸ்தாபனத்துக்கு முடிவு கட்டிவிட்டார்கள். வருகிற 13-ம் திகதி அகிலஇந்திய முஸ்லீம்லீக்கின்கூட்டம் கராச்சியில் கூடும். அதன்பின்முஸ் முஸ்லிம்லீக் ஸ்தாபனங்களின் மகாகூட்டம் ஒன்று புது டெல்கியிற் கூடுமாம். இந்தியாவில் உள்ள முஸ்லீம்கள் இனிக் காங்கிரஸ் தாபனத்திற் சேர்ந்து, ஹிந்துக்களுடைய வாழ்வு தாழ்வுகளிற் பங்குபற்றுவதால்தான், தமக்கு அரசியல்விஷயமான விமோசனம் கிடைக்குமென்று முஸ்லிம் லீக் ஸ்தாபனத்து [illegible] இப்போது கருதுகிறார்களாம்.

## இலங்கைஅரசியலில் தமிழர் நிலை

3–ம் பக்கத் தொடர்ச்சி

மும், தமது சொந்தவாழ்க்கையில் முதலாளித்துவமும் காட்டும், என். எம். பெரீரா போன்ற வேடதாரிகளும் அல்லர். இவர்களுடன் சமரசத்துக்கு வருதல் மிகவும் சுலபம் என்பதே எனது அபிப்பிராயம். தமிழ்க்காங்கிரஸ் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமா?

## அரசாங்கத்துக்கு மகத்தான வெற்றி

இலங்கைக்கு வழங்கப்படவிருக்கும்சுதந்திரத்தின்பொருட்டுமகிழ்ச்சி தெரிவிக்கவேண்டும் என்று பிரதம மந்திரி மிஸ்டர் சேனநாயக்காவினால் எடுத்தாளப்பட்ட தீர்மானத்தின் பேரில் நிகழ்ந்த விவாதம் சென்ற புதன்கிழமை முடிவடைந்தது. தீர்மானத்துக்குச் சாதகமாக 59 பேரும் பாதகமாக 11 பேரும் வாக்களித்தனர். தமிழ்க் காங்கிரஸ், இந்தியக் காங்கிரஸ், டக்டர் என். எம். பெரீராவின் சமசமாஜக்கட்சியினர் சாதகமாகவோ பாதகமாகவோ வாக்களிக்கவில்லை.

## சமய தீட்சை

மேற்படி தீட்சை கார்த்திகை மாசம் ௩ (19-11-47) புதன்கிழமை முற்பகல் மேலைத்தெல்லி இந்துவாலிபர்சங்க ஆதரவில் பன்னாலை அடியார் திருமடத்தில் நடைபெற்றது. முப்பத்துநாலு பேர் சைவசமயப்பிரவேசம் செய்து சமயகுருவால் தீட்சைசெய்யப்பட்டார்கள். பெரும்பாலும் சிறுவர்களும், பெண்மணிகளும் கலந்துகொண்டார்கள். 24-11-47 திங்கட்கிழமை அடியார் திருமடத்தில் சிவபூசையும் அன்னதானம் வழங்கலும் நடைபெற்றன. அத்தருணம் பன்னாலை ஸ்ரீ கனகசபை வித்தியாசாலை ஆசிரியர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் 'தீட்சையின் மகத்துவம்' என்னும் விஷயமாகச் சிறந்த சொற்பொழிவாற்றினார்.

—கடித


# இலக்கிய வாசகம்

மூன்றாம் புத்தகம்

நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது
(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

**இதன் வசனபாகம்**

சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுப்பட்டுளது

**செய்யுட் பாகம்**

பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக்கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை என்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதி ஒன்று விலை சதம் 60 (அணா 10)**

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை
யாழ்ப்பாணம்



# மலேயாவுக்குக் கப்பல் பிரயாணம்

யாழ்ப்பாணம்—சென்னபட்டணம—
பினாங்—சிங்கப்பூர்

சென்னபட்டணம் மார்க்கம் பினாங், சிங்கப்பூருக்கு மாதம் இருமுறையும் நேரே சிங்கப்பூருக்கு ஒருமுறையும் வசதிகளடங்கிய,

**கப்பல் பிரயாணச் சீட்டு**

எம்மூலம் 1947 நவம்பர் மாதம் தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்

எஸ். ஆர். எஸ். நாதன்
21/3, ஸ்ரான்லி ரோட் :: யாழ்ப்பாணம்

Std 22. 6-6-47—6-6-48



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து எற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)


## பலஸ்தீன பிரிவினை

### முற்றாகிவிட்டது

பலஸ்தீனத்தைப் பிரித்து, யூதருக்கும் அராபியருக்கும் வழங்குவது என ஐ. தே. ஸ்தாபனம் தீர்மானித்துவிட்டது. இந்தியா, பாகிஸ்தான் என்னும் இரு நாடுகளும் உலக முஸ்லீம் நாடுகளும் பிரிவினைத் தீர்மானத்தைப் பலமாக எதிர்த்தபோதிலும் அத்தீர்மானம் நிறைவேறிவிட்டது. பிரிவினைத் திட்டத்தை அமுல் நடத்தி, பலஸ்தீனத்தை இரு நாடுகளுக்கும் பங்கிடும் பொறுப்பை ஐந்து தேசங்களிடம் ஐ. தே. ஸ்தாபனம் ஒப்புவித்திருக்கிறது,

பிரிவினைத் திட்டத்தை ஓர்போதும் ஏற்கமுடியாதென்றும், உலக முஸ்லீம்களின் சரீரத்திலே ஒரு துளி ரத்தம் இருக்கும்வரையில், அவர்கள் அதனை எதிர்ப்பரென்றும் முஸ்லீம் நாடுகள் தீர்மானித்திருக்கின்றன. பலஸ்தீனப் பிரிவினை மூன்றாவது யுத்தத்துக்கு ஏதுவாகும் என்றும் அஞ்சப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

கந்நம ஐந்துமுகர் தந்நமுருகேசநம சங்கையுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலையணியுந்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்ப ரமதாம்
எந்தைநம என்றுமிளை யோய்நம குமாரநம என்றுதொழுதார்.

கந்தக்கடவுளே வணக்கம், ஐந்து திருமுகங்களையுடைய பரமசிவன் பெற்றருளிய முருகக்கடவுளே வணக்கம், கங்காதேவி உமாதேவியென்னு மிருவருக்கும் புதல்வராயுள்ளவரே வணக்கம், பன்னிரண்டு திருப்புயங்களைக்கொண்ட பெருமானே வணக்கம், கடம்பம்பூமாலையை யணிந்த பரமபிதாவே வணக்கம், ஆறுதிருமுகங்கொண்ட ஆதிக்கடவுளே வணக்கம், சோதிசொரூபராய் விளங்குந் தெய்வமே வணக்கம், பரம்பொருளாய் விளங்குகின்ற எங்கள் பிதாவே வணக்கம் எந்நாளும் இளமையோடு கூடிய பெருமானே, வணக்கம் என்று துதித்து வணங்கினர்கள் (தேவர்கள்) என்பது கருத்து.

ஐந்துமுகர் என்றது இங்கே சதாசிவமூர்த்தியை, சதாசிவ மூர்த்தியே தமது ஐந்து திருமுகத்தோடு அதோமுகஞ்சேர ஆறு திருமுகங்கொண்டு முருகவேளை அறுபொறிவடிவமாகத் தந்தருளின ரென்பது. "....அருள் புரிந்தநிஞானே, சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகமாறுங் கொண்டான்" என்பது முதலாந் திருவவதாரப்படலத்திற் சொல்லப்பட்ட திருவிருத்தங்களால் விளங்கும். சண்முகப் பெருமானைத் தோற்றச் செய்தருளியவர் இச்சதாசிவமூர்த்தியென்ற விசேடத்தைத் தெருட்டுதற்பொருட்டே. ஆசாரியசுவாமிகள் காப்புத் திருவிருத்தத் தொடக்கத்திலேயே "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" என முருகவேள் அருள்கொண்டு பாடியுள்ளார்; அறுபொறிகளையும் மூக்திச் சரவணப் பொய்கையில் உய்த்தவன் சங்கையாதலினாலும், பின்னர் அறுகுழந்தைகளையும் தமது திருக்கரங்களால் அணைத்து ஒன்றுசேர்த்தவள் உலகமாதாவாகிய ஈசுவரியாதலாலும் மூதற் கங்கையையும பின்னர் ஈசுவரியையும் வைத்து இருவர்க்குந் திருக்குமாரரென்னும் பொருளமைய "கங்கையுமை தன்மைந்த" என்றார்,

"தந்தைநம" என்று இத்திருவிருத்தத்தின் மூன்றுமடியிற் கூறிப் பின்னர் 'எந்தைநம" என நான்காமடியிலுங் கூறியிருத்தல் மிகையாகாதோ வெனின், அற்றன்று; தந்தையென்பது சகல உலகங்களின் கண்ணுமுள்ள ஆன்மகோடிகளுக் கெல்லாம் பரமபிதா எனபதைப் பொதுவாக உணர்த்தி நிற்றலானும், எந்தையென்பது தேவர்களாகிய தங்கள் பிதா எனச் சிறப்பாக உணர்த்தி நிற்றலானும் மிகையாகாதென்க. தந்தை எந்தை, தம்பி எம்பி என்னுஞ் சொற்களுக்கிடையேயுள்ள பொருண் நுட்பங்களைத் திருவாதவூரடிகள் புராணத்தில் "தங்கமத கும்பவுயர் தும்பிமுகர் தம்பி" என வருந் திருவிருத்த விருத்தியுரையிற் காண்க.

இங்கே தேவர்கள் சண்முகப்பெருமானை அவருக்குரிய ஆயிரநாமங்களுட் பத்துத் திருநாமங்களால் வாழ்த்தியுள்ளனர்; வேலவன், மயில்வாகனன், வள்ளிநாயகன். தெய்வயானை காந்தன், சேவலங் கொடியோன் என்ற திருநாமங்களைக் கொண்டு அச்சமயத்திலே தேவர்கள் போற்றுதொழிந்த காரணம் யாதோவெனின், அச்சிறப்புக்களெல்லாம் சூரசம்மாரத்தின் பின்னர்ச் சேருஞ் சிறப்புக்களாதலினென்க.

வியாழபகவான் மேருமலையின்கண் தரிசனஞ் செய்தபோது பாலசுப்பிரமணிய வடிவத்தோடு காட்சிகொடுத்தருளிய முருகக்கடவுள், அந்த வியாழனுடைய வேண்டுகோட்கிரங்கி அத்தேவர்களை ஞானத்தோடு கூடியவர்களாய் உயிர்பெற்றெழச் செய்தபோது சண்முகமூர்த்தியாகக் காட்சி கொடுத்தன ரென்பது இத்திருவிருத்தத்தில் வரும் "பன்னிரு புயத்த நம, ஆறுமுக ஆதிநம" என்னு மிவற்றல் அறியற்பாலதாம். (82)

பொருந்துதலை யன்புட னெழுந்தவர்க ளிவ்வகை புகழ்ந்து மனமேல்
அரந்தைகொடு மெய்ந்நடு நடுங்குதலு மன்னதை யறிந்து குமரன்
வருந்தலிர் வருந்தலிர் எனக்கருணை செய்திடலும் மற்றவர்கடாம்
பெருந்துயரும் அச்சமு மகன்றுதொழு தேயினைய பேசினர்களால்.

(இங்ஙனம் வீழ்ந்து வணங்கி) எழுந்தவர்களாகிய தேவர்கள், தங்களிடத்து அமைந்த தலையாய பத்தியோடு இவ்வாறு தோத்திரஞ்செய்து, தத்தம் உள்ளத்தில் அச்சமுண்டாக அதனல் நடுக்கங் கொள்ளுதலும், குமரக்கடவுள் அத்தேவர்களுடைய மனநிலையைத் திருவுளத்திற் கொண்டு, நீவிர் வருந்தாதீர் வருந்தாதீர் என்று திருவருள்செய்ய, அத்தேவர்தாம் மனத்திற்கொண்ட அதிக கவலையும பயமும் நீங்கப்பெற்று மீட்டும் வணங்கிப் பின்வருமாறு விண்ணப்பஞ் செய்வாராயினர் என்பது கருத்து

முருகக்கடவுள் அத்தேவர்களை எழுப்பும்போதே சிறிது ஞானமளித்தனராதலின், அந்த ஞானத்தினல அவர்கள் முருகமூர்த்தியின் பரத்துவத்தை யுணர்ந்து அப்பெருமானிடத்துத் தலையன்பு வைத்தனராதலின் "பொருந்துதலையன்புடன்" என்றார்; "அணையான் செஞ்சரணிரண்டினையும் உச்சிகொடுமேயினர்" என மேலுள்ள 81-ம் திருவிருத்தத்திற் கூறியவாறு பெருமானுடைய திருவடியில் வீழ்ந்து வணங்கிய தேவர்கள், பின்னர் எழுந்தென்பார் "எழுந்து" என்றார்; இங்ஙனமின்றி எழுந்தென்பதற்கு உயிர்பெற்றெழுந்து என உரைகொண்டமை பொருந்தாதென்க; சிவபராதத்தைச் செய்துவிட்டோமே யென்றதனல் தேவர்கள் கொண்ட அரந்தை அச்சம் நடுக்க மென்னுமிவை, அப்பெருமான் 'அஞ்சலிர்" என அபயங்கொடுத்துக் கருணைபுரிந்த மாத்திரத்தே அகன்றனவாதலின் பெருந்துயரும் அச்சமுமகன்று என்றார். இங்கே தேவர்கள்கொண்ட அரந்தையும் அச்சமும் இருவகையானவை, சுப்பிரமணியப் பெருமானுக்குத் தவறு செய்த தோமேயென்பதனல் நேர்ந்த அரந்தையும் அச்சமுமொன்று, அப்பெருமானுக்குத் தவறு சய்தமையினல், அவர் சூரன் முதலியோரைச் சம்மாரஞ்செய்யாதொழியும், தங்கள் [illegible] நேருமோ என்ற அரந்தையும் அச்சமும் மற்றொன்றாம். (தொ-)

---

பண்டிதர்

## ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

# அறுபதாம் ஆ நிறைவு விழா நிதி

நமது பண்டிதரவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை, வருகிற மார்கழி மீ கஉவ (27-12-47) சனிக்கிழமை திருவருளைமுன்னிட்டு நடத்தநிச்சயித்திருப்பதால், அத்தேதிக்கு முந்தியே மேற்படி பண்டிதரவர்களின் மாணக்கர்கள் அபிமானிகளாயுள்ளா ரனைவரும் இந்நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்றபணம்உதவுக: மேலும் பணம்உதவும்அன்பர்கள் தம்பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி, திரு. S. P. கந்தையா அவர்கள் மேற்படி நிதித் தனதிகாரி, இந்துசாதனலயம், வண்ணார்பண்ணை என்னும் விலாசத்திற்கு அனுப்புக.

இந் நிதிக்குப் பண முதவுவோரின் பெயர், விலாசம், பணத் தொகை முதலியன இந்துசாதனத்தில் வெளிவரும்.

கா. கந்தையா,
தலைவர்.

க. சி. சுப்பிரமணியம்,
காரியதரிசி.

ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை, வண்ணார்பண்ணை

---

# திருச்சி ரேடியோ

புதன் டிசம்பர் 10

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி என் கங்காபாய் பாட்டு 8 ஆங்கிலத்தில செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 டி என் நாகராஜன் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி என் நாகராஜன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 டி என் நாகராஜன் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 கே எஸ் ஹரிஹரய்யர் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 இளவரசியின் காதல் நாடகம் 7 15 சித்ரகானம இசைத் தட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 ரேடியோ வாத்யகோஷ்டி 8 கே எஸ் ஹரிஹர ஐயர் பாட்டு 8 30 டி என் கங்காபாய் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வாத்ய கதம்பம் இசைத்தட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

வியாழன் டிசம்பர் 11

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எம் கனகசபைபிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 திண்டுக்கல் ஜி கிருஷ்ணமூர்த்தி வீணை 9 முடிவு

1 ஆரம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 குரல்வகை இசைத்தட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 எம் கனகசபைபிள்ளை பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 கலப்பு. பேச்சிலும் எழுத்திலும் 7 30 தமிழில் செய்திகள் 7 45 நாகம்மா, கமலா பாட்டு டி எஸ் வைத்தியநாதன் ஐயரின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 திண்டுக்கல் ஜி கிருஷ்ணமூர்த்தி வீணை 10 30 முடிவு.

வெள்ளி டிசம்பர் 12

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எம் கண்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 தஞ்சாவூர் ஆர் சுப்பிரமணியம் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம் கண்ணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 தஞ்சாவூர் ஆர் சுப்பிரமணியம் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 கே கல்பகம் பாட்டு 5 40 குரான்ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருப்பாம்புரம் எஸ் எஸ் மீனாட்சிசுந்தரம்பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 மந்திரமா மருந்தா? நாடகங்கள் 8 கே கல்பகம் பாட்டு 8 30 திருப்பாம்புரம் எஸ் எஸ் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 வண்டு சொன்னகதை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இருதுழல் இசை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

---

# விவேகானந்த திருக்குறட் கலண்டர் 1948

1948-ம் ஆண்டிற்குரிய "விவேகானந்த திருக்குறட் கலண்டர்" பிரதியொன்று வரப்பெற்றோம். இக் கலண்டர் பெரிய பிரமாணத்தில் சைவ, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்துவ மதத்தினர்க்குரிய, பல நிறத்தோடு கூடிய சித்திரங்களோடும், இந்தியத் தலைவர்கள், "சினிமா" நடிகர் நடிகைகளாகிய இவர்களின் பிரதிமைப் படங்களோடுங் கூடிய முகப்பினைக் கொண்டது. நாள்தோறு முள்ள தேதியட்டவணையில் ஆங்கில, தமிழ், இஸ்லாமிய தேதிகளுடன், திதி, நட்சத்திரம், யோகம் முதலியனவும், இலங்கையி லுள்ள சமயத்தினர்க்குரிய விசேஷ தினங்களும், அரசாங்க விடுமுறை, 'வங்கி" விடுமுறை நாட்களும், இராகு காலம் முதலியனவும், இனிது குறிக்கப்பட்டுள்ளன; இன்னும் நாயன்மார் குருபூசைத் தினங்களும், பெரியார் திருநாட்களும், தேவாலய உற்சவங்களும், சுப முகூர்த்தங்களும், இன்ன பிறவும் தெளிவாக வாக்கிய கணித முறைப்படி வரையப்பட்டுள்ளன; உபயோகிப்போர் நாள்தோறும் மனனம்பண்ணத்தக்க முறையில் ஒவ்வொரு திருக்குறள் பொருந்தியுள்ளன; முந்திய ஆண்டுகளில் வெளிவந்த கலண்டரைக் காட்டிலும் இவ்வாண்டிலே சில விஷயங்கள் விசேஷமாகச் சேர்க்கப்பட்டுள்ளன; பஞ்சாங்கத்திற் பார்த்தறியவேண்டிய விஷயங்களை இக் கலண்டர் மூலமாகப் பார்த்தறியலாகும்; இக்கலண்டர் இங்கு வெளிவரும் கலண்டர்களுட் சிறந்ததெனலாம், இது யாழ்ப்பாணம் விவேகாநந்த அச்சியந்திரசாலை, புத்தகசாலை யென்னுமிவற்றின் அதிபர்களாகிய சகோதரர்களால், தங்கள் அச்சியந்திரசாலையில் வனப்புவாய்ப்ப அமைத்து அச்சிட்டு வெளியிடப்பெற்றது. கலண்டர் பிரதியொன்றின் விலை 1 ரூபா 50 சதமாகும். பெற விரும்புவோர், யாழ்ப்பாணம் பெரியகடை விவேகாநந்த யந்திரசாலையிற் பெறலாகும். தெலிபோன் இலக்கம் 117.

## "கௌரி கலண்டர்"

இத்தேதி யட்டவணை யாழ்ப்பாணம் நாவலர் அச்சியந்திரசாலை யதிகாரிகளால் வெளியிடப்பெற்றுள்ளது; இக் கலண்டர் இருவர்ணத்தில் அடிக்கப்பட்டு தேதி விபரங்களோடு, முகப்பில் பல வர்ணச் சித்திரங்கள் பொருந்தப்பெற்றது; ஆங்கில தமிழ் இஸ்லாமிய தேதிகளும், இலங்கையிலுள்ள சகல மதத்தினர்க்குமுள்ள விசேட தினங்கள், விடுமுறை நாட்கள் முதலிய விபரங்களும் குறிக்கப்பட்டுள்ளது. வீட்டுத் தலைவாசல், உத்தியோகத் தானங்கள், கலாசாலை, வாசகசாலைகள் கடைகள் முதலியவற்றிற்கு அணிசெய்வது பிரதியின்விலை குறிக்கப்படவில்லை.

நமது உபயோகத்திற்கனுப்பிய பிரதிகளை உவந்தேற்றும்.

---

## நாவலர் இன்று வாழ்ந்தால்

2 ம்பக்கத் தொடர்ச்சி

மாக வற்புறுத்துவார் என்று நான் பூரணமாக நம்புகிறேன். இந்த நாட்டின்மீது பற்றுள்ள தமிழ் மக்களுக்கு நான், நாவலப் பெருமான் குருபூசைத் தினத்தல் சமர்ப்பிக்கும் செய்தி இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனடியார் பெருமை

முதலாம் பக்கத் தொடர்ச்சி

விரைந்துசென் றெய்த
ஆனையாற் றடுத்த
வாச ரேறே
6 பொருகளத் தோட்டலின்
புணர் நுதனீறு
கண்டுனைப் போலக்
கருதிமற் றவனைத்
தன்படை சாய்த்தவன்
தன்படை மார்பிற்
றுக்கக் கொடுத்த
தளர்விலன் பினனே
7 அருஞ்சிறு மகனை
யரிந்துநிற் கூட்டப்
படைத்துக் களிகூர்
பரிவுடை யவனே
8 நின்சிரஞ் சாத்து
நீக்குபூ மோந்த
மாதுமூக் கரிந்த
மலிபெருந் தவனே
9 துணுக்கென வவள்கை
துணித்தகொற் றவனே
10 சந்தன மாகச்
சாத்தநின் றனக்கு
முன்கை தேய்த்து
முகமலர்ந் தவனே
செயற்கருஞ் செய்கை
செய்தவன் யார்கொல்
பகருதி வெங்கைப்
பழமலை நாத
பராபர முக்கட்
பகவசங் கரசிவ
கருணா கர திருக்
கயிலை நாயக
என்றருந்தவர்க ளேத்தும்
மின்றிகழ் சடிலப்
பெருந்தகை யோனே.

சிவனடியாரின் செயற்கருஞ் செய்கையை இப்பாடலில் ஒவ்வொன்றாக எடுத்து விளக்கி எது சிறந்ததென்று இறைவனையே கேட்கின்றார் சிவப்பிரகாசர். எல்லாஞ் சமத்துவமுடைய அருஞ் செயல்களே என்பது பேரந்தமை காண்க. இப்பாடலில் குறிக்கப்பட்ட சிவனடியவர்பதின்மர். அவர்களின் பெயர் முறையே 1. திருநீலகண்டர், 2. இயற்பகையார் 3. மானக்கஞ்சாறர் 4, கண்ணப்பர் 5. மெய்ப்பொருள் நாயனர் 6. ஏனாதிநாதர் 7. சிறுத்தொண்டர் 8. செருத்துணையார் 9. கழற்சிங்கர் 10. மூர்த்தியார்.

சிவனடியவரின் இலக்கணத்தை சிவதத்துவ விவேக நூலுடையார் சுருக்கமாகக் கூறுகின்றார்!

மறைமுடிவிற் பயில்கருத்து
மன்னியமெய்ப் பொருள்விருப்புங்

# ஒன்றும் மூன்றும்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தலை தயிர்போல மாயாசக்திகள் நம்மை வாட்டி யலைக்கும்போது 'அஹம்பிரமம்' நினைப்புக்கு வருவதில்லை. தனுகரண புவன போகாதிகள் நம்மை எளிதில் விடுவதில்லை.

காமவெளி மயக்கங்கள் நம்மை வலிந்திழுத்துத் துயர்க்கடலில் தள்ளித் தத்தளிக்கச் செய்கினறன.

அச்சமயம் வேதாந்தம் பேசினுல் நமக்குச் சினம் பொங்குகிறது.

அச்சமயம் ஆகமம் என்னசெய்கிறது? நோய்க் குழந்தைக்கு மருத்துவம் புரியும் தாய்போலப் பொறுமையாக ஆன்மாவைத் தன் கையில் ஏற்கிறது.

தனுகரண புவனபோகாதிகளை ஊட்டுகிறது அனுபவம்காட்டுகிறது. மாயா சக்திகளின் மாற்றத்தை உணர்த்துகிறது. சரியை கிரியைகளால் சித்த சுத்தியளிக்கிறது; யோகத்தால் புறஞ் செல்லும் மனத்தை உள்ளே திருப்புகிறது.

மனவொருமைப் பாடுடன் ஆன்மா அன்பு முதிர முதிர அருளைப் பொழிகிறது. அருள்பழுக்கப் பழுக்க அறிவொளி துலங்குகிறது. அறிவு மலர்ந்ததும் ஆன்மா விழிப்புறுகிறது. அந்நிலையில் சிற்றின்பம் வெற்றின்பம் சித்தின்பம் பேரின்பம் என்று ஆன்மா உணரும்,

'நீ ராஜா' என்று சொல்லி வாய் மூடுகிறது வேதம். ஆகமம் பகைவரை வென்று அரசனுக்குரிய அறிவறம் ஆற்றல்களைப் புகட்டி ஆன்மாவை அருளாட்சிக்குப் பயிற்றுவிக்கிறது."

முப்பொருளுணர்த்தும் சித்தாந்த அறிவை உலகில் உள்ள எல்லா அறிஞர்களுக்கும் எட்டும்படி செய்ய வேண்டும். —சித்தாந்தம்,

கறைமிடற்றோன் திருவடிக்கீழ்
மெய்யன்புங் கடுந்துயர்நோய்
பலறயவரு மிம்மூன்றும்
பரிந்தியல்பாக் கிடைத்தமனம்
நிறைவுடையோ ரேவரவர்
நீடூழி வாழிய வே.

இத்தகைய அடியவரின் சரித்திரங்களைத் திருத்தொண்டர் புராணங் கூறுவதால் அதற்குப் பெரியபுராணமெனப் பெயர் வழங்குவதாயிற்று. அதிற் கூறப்படும் அடியவர்களே சீவன் முத்தரெனப்படுவர் அவர்களே மகான்கள் பெரியோர்கள். இக்காலத்தில் பலர்தம்மைத்தாமே மகானென்றும் பெரியோனென்றும் சொல்வது வெறும் போலிபாம்.


# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணுக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக் கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

(Std.29 1-8—30-7-48)

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட, நாகபட்டணமிருந்து பினுங் செல்ல டேக் ரிக்கற் ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக் கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ் செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறை ரோட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
தந்தி (Srivel) :: :: பிராஞ்சு: நாகபட்டணம்.

33 2—9—47&28.2.48


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.


# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to 1—4—48

# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். பெண்களுக்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம் :

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —
Std 25 1-7-47—30-6-48 (9.)


Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna, on Tuesday, December 9. 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org